[1979 மார்ச் 20

(2) தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஈ) கைத்தறிச் சங்கத் தொழிலாளர்களது போராட்டம் குறித்து.

[முற்பகல் 11–00]

திரு. க. சுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது நாடு முழுவதும் கைத்தறி சங்கத் தொழிலாளர்கள் நடத்தி வருகின்ற போராட்டம் காரணமாகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது நூல் விலை ஏறி விட்டது. இந்த நிலையில் திடீரென்று அன்ஷெட்யூல்டாக நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களையும் அழைத்துக்கொண்டுபோய் பம்பாயிலே சம்பந்தப்பட்ட துணைக் கமிஷனரை சந்தித்து இந்த விவகாரத்தை முடித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறதே; அதைப்பற்றி இங்கே ஒரு அறிக்கை வைப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆகவே அறிக்கை வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—இதுபற்றி 41ஆவது விதியின் கீழான கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்த பிறகு பேசிக்கொள்ளலாம்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) கலசபாக்கம் தொகுதியில் விவசாய மின் இணைப்புகளுக்கு மின் வெட்டு உள்ளது குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலசபாக்கம் தொகுதியில் உள்ள வீரளூர், ஆதமங்கலம், சிறுவள்ளூர், தென்மாதிமங்கலம், அரிணகிரிமங்கலம், கடலாடி, தேவனாம்பட்டு, பெரிய கிளாம்பாடி மற்றும் பல கிராமங்களுக்கும் காஞ்சி மின்நிலையத்திலிருந்து 8–3–1979 முதல் விவசாய மோட்டார்கள் இயங்க அறவே மின்சாரம் தராமல் மோட்டார்கள் இயங்காமல் பல ஆயிரக்கணக்கான நஞ்சைப் பயிர்கள் காய்ந்தும், மோட்டார்கள் காயில் தீய்ந்தும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு கொதிப்படைந்துள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலசபாக்கம் தொகுதியில் உள்ள வீரளூர், ஆதமங்கலம் மற்றும் பல கிராமங்களுக்கு காஞ்சி 33/Mகே.வி. உபமின

நிலையத்திலிருந்து தென்மாடி மங்கலம் 11, கே. வி. ஃபீடர் வழியாக மின்சப்ளை செய்யப்படுகிறது. தமிழ்நாடு மின் அமைப்பின் நிலை காரணமாக (Grid conditions) காஞ்சி 33 கே. வி. உபமின் நிலையத்திற்கே கீழ்கண்ட தேதிகளில் பகல் நேரங்களில் எதிரே குறிப்பிட்ட நேரங்களில் மின் சப்ளை துண்டிக்கப்பட்டது.

தேதி.	கால அளவு.
8– 3–1979	8 மணி 15 நிமிட நேரம்.
9– 3–1979	6 மணி 5 நிமிட நேரம்.
10– 3 1979	5 மணி நேரம்.
11– 3–1979	மின்தடையில்லை.
12– 3–1979	மின் தடையில்லை.
13– 3–1979	30 நிமிடங்கள்.
14– 3–1979	மின் தடையில்லை.
15– 3–1979	1 மணி நேரம்.
16– 3–1979	4 மணி 5 நிமிட நேரம்.

மேலும், மீதமுள்ள காலை நேரங்களில் நடைமுறையில் உள்ள மின் பகிர்வு அடிப்படையில், காஞ்சி உப மின் நிலையத்தில் உள்ள மூன்று 11 கே. வி. பீடர்களிலும், மின்சப்ளை முடிந்த மட்டும் பகிர்வு செய்து வழங்கப்பட்டது. மேலும், மேற் சொன்ன தேதிகளில் இரவு நேரங்களிலும் காஞ்சி உப மின் நிலையத்திலுள்ள மின் மாற்றிகளில் கூடுதல் மின் பளு காரணமாக இரண்டு, மூன்று மணி நேரங்கள் மின் சப்ளை நிறுத்தப் பட்டது. தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 16–3–1979 மாலையிலிருந்து மேல்கண்ட பகுதிகளில் மின் சப்ளை சீராக வினியோகிக்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் மின்சாரம் வழங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். திருவண்ணாமலைப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் இருக்கிறது. அங்கிருந்து காஞ்சி, துணை மின்நிலையம், அவலூர்பேட்டை துணை மின் நிலையம் ஆகியவற்றின் மூலமாக மின்சாரம் தருகிறார்கள். அப்போது நான்கு மணி நேரம், 5 மணி நேரம் என்று தருகிறார்கள். அந்த மின்சாரத்தினால் அறவே மோட்டார்கள் இயங்கவில்லை. அங்கே இருக்கின்ற பல மோட்டார்கள் கடந்த 8–3–1979 அன்றிலிருந்து இயங்காமல் காயில் தீய்ந்துபோயிருக்கிறது. பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர்கள் காய்ந்துகொண்டிருக்கின்றன. இவர்கள் தருவதாகச் சொல்லப்படும் மின்சாரம் வருகிறபோது மோட்டார் இயங்கவில்லை. நானே கூட என்னுடைய மோட்டாரை மின்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1979 மார்ச் 20

சாரம் வருகின்றபோது இயக்கிப் பார்த்தேன். மோட்டார் இயங்கவில்லை. காயில் தான் தீய்ந்துவிட்டது. ஆகவே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இவ்வளவு மணி நேரம் நாங்கள் மின்சாரம் தருகிறோம் என்று சொல்வது பெரிதல்ல. மோட்டார்கள் ஓடாமல் இருக்கின்ற நிலைமையினை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயிகள், பயிரெல்லாம் சாவியாகிவிடுமோ என்று பயந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த கருத்தின் அடிப்படையிலேயும், அவர்கள் என்னிடத்திலே நேரில் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலேயும் இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று மின்வாரியத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருவண்ணாமலையில் மின் நிலையத்திற்கு சிங்காரப்பேட்டையிலிருந்து மின்சாரம் வருகிறது. அங்கிருந்து காஞ்சி, அவலூர்பேட்டை, ஆகிய இடங்களில் உள்ள துணை மின் நிலையங்களின் மூலமாக மின்சாரம் தரப்படுகிறது. திருவண்ணாமலை மின் நிலையத்தை கிரிட்லைனுடன் இணைப்பதற்கு ஆவன செய்தால் பிரச்சினை தீர வழி ஏற்படும். ஆகவே அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அடுத்து இப்போது சொல்வதுபோன்று 5 மணி நேரம் 6 மணி நேரம் என்று மின்சாரம் தருவதைவிட 2 மணி நேரம் மின்சாரம் தந்தாலும் மோட்டார்கள் இயங்குகின்ற அளவுக்கு மின்சாரம் தந்தால் அது விவசாயிகளுக்கு மிக்க நன்மையாக இருக்கும். ஆகவே அந்த வகையிலே நடவடிக்கை எடுத்து விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை.

திரு. அ. செல்லப்பா: பாயின்ட் ஆப் ஆர்டர், அரசிதழ் பதிவிலா அலுவலர்கள் தமிழ் நாட்டில் மாவட்டந்தோறும் தொடர் உண்ணாவிரதம்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை. தயவு செய்து உட்காருங்கள்.